Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 132

National Tamil Daily தேசிய தினசரி

(24-6-65)

விசுவாவசு ஆனி 10 பைர் பிறை 23 வியாழக்கிழமை

# மந்திரியின் யோசனையை மாநகரசபை நிறைவேற்றுது

யாழ்ப்பாணம், வியாழன் தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கும் முயற்சியாக மீன்பிடித் தொழிலில் தமிழ்ப் பேசும் பகுதி இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு தமிழ்பேசும் பகுதிகளிலுள்ள ஸ்தலஸ்தாபனசபைகள் மீன்பிடிப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கலாம் என்று ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் சமீபத்தில் கூறிய யோசனையை செயல்படுத்தும் நிலையில் தமிழ்பேசும் பகுதிகளிலுள்ள ஸ்தலஸ்தாபன சபைகள் எதுவும் இல்லையென்று தெரியவருகிறது.

மந்திரி கூறிய யோசனை சிறந்ததாக இருப்பினும் இந்த யோசனைகளை செயலில் நிறைவேற்றுவதற்கு இச்சபைகளின் பொருளாதார நிலை இடம்கொடுக்கக் கூடியதாக இல்லையென்றும் இத்திட்டங்களுக்கு நிதியுதவியோ, கட்டுநிதியோ அளிக்கும் நிலையில் அரசாங்கமும் இல்லையென்றும் தமிழ்ப் பகுதி ஸ்தலஸ்தாபன சபைகள் கருதுவதாக அறியப்படுகிறது. என்றாலும் தமிழ்பேசும் மாவட்டங்களிலுள்ள ஸ்தலஸ்தாபன சபைகள் சில ஒன்றுசேர்ந்து மந்திரியின் யோசனையை அமுல் நடத்துவதுபற்றி ஆலோசனை செய்யவிருப்பதாகவும் அறியப்படுகிறது. மீன்பிடித் தொழில் பயிற்சி நிலையம் அமைக்கும் மந்திரியின் யோசனையை யாழ்ப்பாணம் மாநகரசபை செயலில் நிறைவேற்றும் யோசனை இருக்கிறதா? என்று யாழ்ப்பாண மேயர் திரு. க. செ. மகாதேவாவிடம் கேட்டபோது, "மாநகரசபையின் நிதிநிலைமை அதற்கு இடமளிப்பதாக இல்லை" என்றார். சபையின் அத்தியாவசிய சேவைகளுக்கே பணமில்லாமலிருக்கையில் இவ்வித திட்டங்களை நிறைவேற்றுவதுபற்றி நினைப்பதற்கே இடமில்லை என்று மேயர் கூறினர்.

# 'பொருள் விலைகள் உயராது'

## நிதிமந்திரி வாக்குறுதி

கொழும்பு, புதன்

"உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்த மாட்டோம். சாதாரண பொது மக்களைக் கஷ்டப்படுத்தும் வகையில் வரி விதிக்கவும் மாட்டோம்" என்று நிதி மந்திரி திரு யு. பி. வன்னிநாயக்கா குருநாகலையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் உறுதியளித்தார்.

1956ம் வருடத்திலிருந்து வரவு-செலவுத் திட்டங்களில் துண்டுவிழுந்துவந்துள்ளதென்றும் இம்முறையும் முன்னைய அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தினால் ஏற்பட்ட நிதிநிலைமையைச் சமாளிக்கத் துண்டுவிழும் வரவு-செலவுத் திட்டத்தையே சமர்ப்பிக்க வேண்டியிருப்பதாகவும் நிதி மந்திரி வன்னிநாயக்கா கூறினார்.

## ஆசிய - ஆபிரிக்க ஒற்றுமை

பேர்லின், ஜூன் 28

ஆசிய - ஆபிரிக்க ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளையும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வரவேற்கிறது என்று வெளிவிவகார இலாகா உயர்தர அதிகாரி ஒருவர் கூறினார்.

அல்ஜியர்ஸில் ஜூன் 29-ம் திகதி ஆரம்பமாகும் 2-வது பாண்டுங் மகாநாட்டில் பங்குபற்றவிருக்கும் நாடுகள் கருத்து வேற்றுமையுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் மகாநாட்டிலேயே தீர்த்து கொள்ளும் என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு எதிர்பார்க்கிறது" என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# "பொதுக்காரியதரிசிப் பதவிக்கு இலங்கையர் எவருமில்லை"

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் திரு. விஜயமானே

லண்டன், ஜூன் 23

கூடிய விரைவில் ரொடீஷியா சம்பந்தமான அரசியலமைப்பு மகாநாடு நடைபெறும் எனத்தாம் நம்புவதாக காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் பேசிய இலங்கை நீதிமந்திரி செனட்டர் விஜயமானே கூறினர்.

அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய - ஆபிரிக்க மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி தாம் பணிக்கப்பட்டிருப்பதையும் அவர் கூறினர்.

காமன்வெல்த் காரியாலய பொதுக் காரியதரிசி பதவிக்குத் தகுதியானவர் எவரும் இல்லை என்றும் அவர் கூறினர்.

நேற்று லண்டனில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 700வது ஆண்டு நினைவுக் கொண்டாட்டத்தில் காமன்வெல்த் பிரதமர்களுடன், மகாராணி எலிஸபெத்தும் கலந்து கொண்டார். வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் இது சம்பந்தமான கொண்டாட்டம் நடைபெற்றது. சபாநாயகர் அல்பர்ட் பீரிஸ், செனட் தலைவர் திரு. தோமஸ் அமரசூரியா ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

நேற்றைய பிரதமர்கள் கூட்டத்திற்கு திரு வில்சன் பார்லிமென்டில் இருக்க வேண்டி ஏற்பட்டதால், ஆஸ்திரேலிய பிரதமர் திரு. மென்ஸீஸ் தலைமை வகித்தார்.

## அரசாங்கத்தின் எச்சரிக்கை

பம்பலப்பிட்டி, புதன்

அரசாங்கத்துக்கு நெருக்கடியைக்கொடுக்கும் நோக்கத்துடன் அரசியல் சார்புள்ள வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் அத்தியாவசிய சேவையில் கடமையாற்றிவரும் ஊழியரைத் தற்காலிகமாக வேலை நீக்கம்செய்து அவர்கள்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இடதுசாரிகள் நாட்டைச் சீர்கேட்டையச் செய்ய விட்டுவிடமுடியாதென்றும் இதன் காரணமாகவே அரசாங்கம் இவ்வித நடவடிக்கை எடுக்கவேண்டி நேரிட்டுள்ளதெனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஒரு கோடி ரூபா கைத்தொழில் விஸ்தரிப்புக்கு

பம்பலப்பிட்டி, புதன்

அடுத்த நிதி வருடத்தில் இன்னும் ஒரு கோடி ரூபாவை அரசாங்க கைத்தொழில் துறைகளில் மூதலீடு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிதியில் பெரும் பகுதி சிமெந்து கார்ப்பரேசனிலும் தேசிய ஜவுளி கார்ப்பரேஷனிலும் மூதலீடு செய்யப்படவிருக்கிறது.

## சுகாதார மந்திரி நடவடிக்கை

பம்பலப்பிட்டி, புதன்

கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ள 'டூல்லி ஹில்' என்ற சரக்குக் கப்பலிலிருந்து 2,000 இரத்தம் கொண்ட போத்தல்களை உடனே இறக்குமதி செய்யுமாறு சுகாதார மந்திரி திரு எம். டி. எச். ஜெயவர்த்தன நேற்று துறைமுக காப்பரேஷனைக் கேட்டுக் கொண்டார்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இரத்தம் அவசியமாகத் தேவைப்படுவதாலேயே மந்திரி இவ்வித நடவடிக்கை மேற்கொண்டார்.

# சிங்களத் தொழிலாளர் நகர சுத்தி தொழிலுக்கு தகுதியில்லை

## கொழும்பு நகரசபை தகவல்

கொழும்பு, புதன்

நகரசுத்திவேலைகளைச்செய்வதற்கு சிங்களத் தொழிலாளர் பின்னிற்கிறார்களென்று கொழும்பு மாநகரசபை அதிகாரிகள் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

நகரசுத்திவேலைக்கு இந்திய வம்சாவளித் தொழிலாளரைத் தெரிவுசெய்வதற்கு அனுமதியளிக்குமாறு மந்திரியிடம் கொழும்பு மாநகரசபை அதிகாரிகள் அனுமதி கோரியிருக்கின்றனர்.

முன்னைய அரசாங்கம்விடுத்த ஒரு உத்தரவைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு முன் இந்திய வம்சாவளிநகரசுத்தித் தொழிலாளரை மாநகரசபை வேலையிலிருந்து நீக்கி சிங்களத் தொழிலாளரை வேலைக்கமர்த்தியது. வேலையை ஒழுங்காகச் செய்யத் தவறியதற்காகவும் வேலைக்கு வராமல் விட்டதற்காகவும் இருபது சிங்களத் தொழிலாளர்களுக்கு மாநகரசபை ஆணையாளர் வேலைநீக்க நோட்டீஸ் வழங்கினர். மந்திரி அனுமதி வழங்கினல் இந்திய நகரசுத்தித் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த முடியுமென மாநகரசபை அதிகாரி ஒருவர் கூறினர்.

# "ஒவ்வொரு தொகுதியும் இரத்ததானம் செய்யவேண்டும்"

## வடமாகாண இரத்தத் தட்டுப்பாடு நீங்க எம். பி. யோசனை

சாவகச்சேரி, புதன்

"வடபகுதியிலுள்ள இரத்த வங்கிக்கு ஒருமாதம் சுமார் 600பைந்து இரத்தம் தேவைப்படுகிறது. இந்த அளவு இரத்தம் கொடுத்து உதவவேண்டியது பொதுமக்களுடைய கடமை, வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு தொகுதிகளும் ஒவ்வொரு மாதத் தேவையை நிவர்த்திசெய்ய முன்வந்தால் யாழ்ப்பாணத்தில் இரத்தத் தட்டுப்பாடு ஏற்படவேண்டிய அவசியமில்லை" என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரி நகரசபை பொதுசன நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்ற சுகாதாரவார விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் கூறினர். இவ்விழாவுக்கு சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. இ. டா. சிவகுரு தலைமைவகித்தார்.

திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில், அடுத்த மாதம் 10ந் தேதி முதல் தடவையாக சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களும், பெரியோர்களும் சாவகச்சேரி டிறிபேக் கலூரியில் இரத்ததானம் செய்வார்களென்று தெரிவித்தார்.

திரு. சிவகுரு தனது தலைமையுரையில் சிறுவர்களைச் சுகாதார முறைப்படி வளர்க்க வேண்டியது தாய்மார்களின் பொறுப்பு என்றார்.

மருத்துவக் கலாநிதி திருமதி பேரம்பலம் உட்பட வேறு பலரும் சொற்பொழிவாற்றினர்.

# சிதானந்தஜி தாயகம் திரும்பினர்

## விமான நிலையத்தில் கண்கொள்ளாக் காட்சி

வெள்ளவத்தை, புதன்

சுவாமி சிதானந்தஜி நேற்று மாலை விமான மூலம் சென்னைக்கு புறப்பட்டார். அவரை வழி அனுப்புவதற்காகவும் அவரிடமிருந்து ஆசியையும், அன்பையும், அருளையும் பெறுவதற்காகவும் பக்தர்கள் விமான நிலையத்திற்கு திரண்டு வந்திருந்தனர் சுவாமிஜி சரியாக 1மணி 50 நிமிடத்துக்கு விமான நிலையத்திற்கு வந்திருந்தார். விமானத்தில் ஏறும் வரையும் மக்களுக்கு அருள்மழை பொழிந்து கொண்டிருந்தார். சுவாமிஜியை பக்தர்கள் சூழ்ந்து கொண்டிருந்தனர். சுவாமியை விட்டுப்பிரிய மனமில்லாமல் பக்தர்கள் வாடிக்கொண்டிருந்தனர். சுவாமிஜி ஆங்கிலத்திலும் தமிழிலும் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தினர். "ஹரே ராமா ஹரே ராமா ஹரே ராமா" என்ற கோஷங்களும் வாயகம என்ற கோஷங்களும் சரவணபவ சரவணபவ சரவணபவ பாகிமாம், சுப்பிரமணிய, சுப்பிரமணிய சுப்பிரமணிய ரட்சமாம் என்ற கோஷங்களும் புத்தபகவான் புத்தபகவான் புத்தபகவான் பாகிமாம், போதிசத்துவ போதிசத்துவ போதிசத்துவ ரட்சமாம்" என்ற கோஷங்களும் வானைப்பிளந்தன. தமது விஜயத்தின் மூலம் இலங்கையிலுள்ள பக்தர்களுக்கும் மற்ற மக்களுக்கும் அருளைப்பொழிந்து இலங்கை மண்ணுக்குத் தூய்மையையும் பரிசுத்தத்தையும் அளித்துவிட்டு இலங்கையை விட்டு சுவாமிஜீ புறப்பட்டுச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தெய்வத்தை நோக்கி எந்தக் காரியம் இட்டுச் செல்லுகிறதோ அது நல்ல காரியம் தெய்வமே இன்பத்தின் ஆணிவேராகும்.

—சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி ௴ 10 உ. (24 6-65)

## செவிடன் காதில் சங்க நாதம்!

இலங்கையில் சுகாதார வாரம் கொண்டாடப்படும் இச்சமயத்தில் டிங்கு ஜுரம் புதிதாய் பரவி மக்களைப் பெரும் இம்சைக்கு உள்ளாக்குகின்றது. நுளம்பு எனும் கொசுக்களினால்தான் இந்தக் காய்ச்சல் தொற்றுநோய்போல் பரவுவதாகக் கண்டுபிடித்துள்ளனர்.

சென்னை நகரத்திலே சில மாதங்களுக்கு முன் பெருமளவில் இம்முறிக்காய்ச்சல் பரவி அங்குள்ள மக்களைப் பெரும் பாடுபடுத்தியது. அப்பொழுதே இந்த நோய் இங்கும் பரவக்கூடுமென்றும் 'வந்தபின் காப்போனாக இராமல்' "வருமுன் காப்போனாக இருக்க வேண்டும்" என்றும் நாம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். வழமைபோல் அதுவும் நமது மாநகர சபையினருக்கு 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' முடிந்தது. மாரி காலத்தில்தான் நுளம்பு உற்பத்தியாகுமென்பர். ஆனால் யாழ்ப்பாண நகரத்தைப் பொறுத்தவரையில் வருடம் முழுவதும் இங்கு நுளம்புத் தொல்லைதான். மலேரியா, யானைக்கால் நோய்போன்றவைகள் நுளம்பினால் பரவுவதாகக் கண்டுபிடித்து அந்நோய்களைத் தடுக்க பெருந்தொகையான பணமும் செலவிடப்பட்டு அதில் ஓரளவு வெற்றியும் காணப்பட்டது. வன்னிப்பகுதியில் மலேரியாவுக்குப் பயந்து அங்கு குடியேற அஞ்சியவர்கள் இப்பொழுது தாராளமாகக் குடியேறியுள்ளனர். ஆனால் யாழ்ப்பாண நகரில் நுளம்புத் தொல்லையால் நிம்மதியாக வாழமுடியாது பலபல குடும்பங்களும் சங்கடப்படுகின்றன:

இந்த 'டிங்கு' பெருமளவில் பரவுவதற்கு முன்பே மாநகர சபை அங்கத்தவர்கள் தங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை ஒதுக்கிவைத்துவிட்டு மக்களின் நலனுக்காக ஒன்று சேர்ந்து ஒத்துழைத்து இக் கொசுத்தொல்லையை ஒழிக்க ஒருபெரும் போராட்டத்தைத் திட்டமிட்டு நடத்த முன்வர வேண்டும். அவர்கள் அவ்விதம் செய்வார்கள் என்றே பொது மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இது இலங்கையைப்பற்றிய விஷயமாகையால் அரசாங்கம் கூடிய உதவி செய்யுமென்றே நம்புகிறோம்.

## கந்தப்புராணப் படிப்பு பூர்த்தி

யாழ்ப்பாணம், புதன்

மறவன்புலோ வலைக்குளம் கணேசர் ஆலயத்தில ஜூன் 6-ந் திகதி தொடக்கி நடைபெற்றுவந்த கந்தபுராணப் படிப்பு நாளை வியாழக்கிழமை விநாயகப் பெருமானுக்கு நடைபெறும் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூர்த்தியாகின்றது. மறுநாள் வெள்ளிக்கிழமை மகேசுர பூசையும் நடைபெறும்.

## ஜவுளி இறக்குமதி

பம்பலப்பிட்டி, புதன்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஜவுளி இறக்குமதிக்கு மேலும் 3 1/2 கோடி ரூபா வரையான கோட்டாவைப் பெறும் தனியார்துறை வர்த்தகர்கள் ஒரு கோடி ரூபா கோட்டாவைப் பெறுவார்கள்.

மேலும் ஜவுளியைக் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கொண்டு வந்து பாவனையாளருக்குப் போதியளவு ஜவுளி கிடைக்க வகை செய்யுமுகமாகவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## புது சீன கதவடைப்பு

வியப்பில்லாத விஷயமாக காமன்வெல்த் சமாதானதூது கோஷ்டிக்கு புதுசீனம் கதவடைத்துவிட்டது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஹனாய் மாஸ்கோ இவ்விடங்களிலிருந்து இதுவரை பதில் இல்லை, அந்நாடுகளும் புதுச்சீனத்தின் போக்கைப் பின்பற்றுவதாயின் அதில் வியப்பில்லை.

ஆனால் இதை முன்னிட்டு அத்தூதுக் கோஷ்டியினர் தங்கள் சமாதான முயற்சியைக் கைவிட்டுவிடக்கூடாது. இக் கோஷ்டியை அமெரிக்கா வரவேற்கத் தயாராக இருப்பதால், அங்குசென்று இரு முக்கிய யோசனைகளை சமாதானத்துக்காக வற்புறுத்த வேண்டும். ஒன்று, புது சீனத்தை அமெரிக்கா அங்கீகரித்து அதை ஐக்கியநாடுகள் சபையில் சேர்த்துக்கொள்ள சம்மதிப்பது. மற்றொன்று வியட்னாமில் விமான வெடிகுண்டு வீச்சுகளை உடனடியாக நிறுத்துவது.

இவ்விரு யோசனைகளும் அமெரிக்காவுக்கு மிகக் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் கிழக்கு ஆசியாவிலே உண்மையில் அமைதி நிலவவேண்டுமாயின், அதற்குள் புதுச்சீனத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். சீனத்தை அங்கீகரிக்காமல் அதன் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதெப்படி?

மேலும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டிலே இந்திய பிரதமர் சாஸ்திரி பேசுகையில், புது சீனம் இப்பொழுது அணுகுண்டு வல்லரசாகிவிட்டதென்பது குறிப்பிடத்தக்கதென்றும் அது இவ்விஷயத்தில் சர்வதேச நியதிக்குக் கட்டுப்பட வேண்டுமென்றும் கூறினர். புது சீனத்தை சர்வதேச கட்டுப்பாட்டுக்கு உட்படுத்த வேண்டுமாயின் முதலில் அதை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஐ. நா. ஸ்தாபனத்தில் இன்னும் புது சீனத்தை சேர்க்காமல் இருப்பது, உலக சமாதானத்துக்கும் சிறப்பாக ஆசிய அமைதிக்கும் நல்லதாகாது.

# "ஆத்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ளதொடர்பே நிலையானது"

## சுவாமி சிதானந்தர் அருளுரை

வெள்ளவத்தை, புதன்

"கடவுளிக்காக வாழ்வதே நான் உங்களுக்குக் கூறும் செய்தியாகும். கடவுளிடம் இருந்து பிரிந்த தொடர்பை மீண்டும் ஏற்படுத்த நாம் அல்லும் பகலும் முயற்சி செய்ய வேண்டும். உலகத்திலேயுள்ள எல்லாத் தொடர்புகளும் நிலையற்றவை. எமது பெற்றோர்கள், மனைவி, மக்கள் ஆகியோரோடு நாம் ஏற்படுத்திய தொடர்புகள் எல்லாம் சிறிது நாட்களுக்கே உரியவை."

இவ்வாறு சுவாமி சிதானந்தஜி விவேகானந்த சபையின் ஆதரவில் நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனையிலுள்ள மோதி மண்டபத்தில் பேசுகையில் குறிப்பிட்டார் சுவாமி. விவேகானந்த சபைக்கு விஜயம் செய்தபின் மோடி மண்டபத்துக்குச் சுவாமி பெருக்காற்றுவதற்கு வந்தார். மோடி மண்டபம் பக்தர்களால் நிறைந்திருந்தது. சுவாமி தமது உரைக்கு முன்பும் இறுதியிலும் பிரார்த்தனை நடாத்தினர். இக்கூட்டத்துக்கு விவேகானந்தசபைத் தலைவர் திரு. இரா. சபாநாயகம் தலைமை வகித்தார்.

சுவாமி சிதானந்தர் தமது அருளுரையில் மேலும் குறிப்பிட்டதாவது-

அழிவற்ற ஆன்மாக்களாகிய உங்களுக்கு கங்கைநதியின் கரையில் உள்ள ரிஷிகேசில் வசிக்கும் சுவாமிகள் சார்பாக நான் பேசுகிறேன். இற்றைக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எனது குருநாதராகிய சுவாமி சிவானந்தா இங்கே வந்தபோது நானும் அவரோடு இங்கே வந்திருக்கிறேன். அப்போதுநான் அவரின் சீடனாக இருந்தேன். உலகிலே தோன்றிய ஆகச் சிறந்த மக்களிலே சுவாமி விவேகானந்தரும் ஒருவர் ஆவார். அவரது பெயரிலே இயங்கும் சபையின் சார்பாக நிகழும் கூட்டத்திலே நான் பேசுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். சுவாமி விவேகானந்தர் உலகமக்களுக்காக தம்மையே அர்ப்பணித்தார் அவர் உலகையே மாற்றி அமைத்தார். அவரது போதனைகள் இன்று உலகிலே எல்லா இடங்களிலும் பிரகாசிக்கின்றன. அவரது நூற்றாண்டு ஜயந்தி அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிறநாடுகளிலும் இந்தியாவிலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தியாவிலே ஓர் ஆண்டு முழுவதும் அவரது நூற்றாண்டுவிழாக்கள் நடைபெற்றன. இதற்கு வேண்டிய முயற்சிகளை இந்திய அரசாங்கம் எடுத்தது. அதுமட்டுமன்றி அவரது புத்தகங்களை வெளியிடவும் இந்திய அரசாங்கம் உதவி அளித்தது. இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும் விவேகானந்தரது புத்தகங்கள் வெளியிடுவதற்கு இந்திய அரசாங்கம் உதவி புரிந்தது. மனிதனிடத்தில் உள்ள தெய்வத்தன்மையை உணர்வதே அவரது முக்கிய போதனையாகும். மக்களுக்குச் சேவை செய்வதின் மூலம் கடவுளை அடையலாம் என்ற உண்மையை அவர் போதித்தார். சுவாமி விவேகானந்தா மதச்சடங்குகளுக்கும் கிரியைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மனிதனது உள்ளம் அன்பால் நிரம்பியிருக்கவேண்டும் என்று அவர் விரும்பினர். மனிதன் சுயநலத்தில் இருந்து விடுதலை பெற்று பொதுநலத்துக்காக உழைக்கவேண்டும் என்பது அவரது போதனையாகும்.

உலகிலேயுள்ள எல்லாச்சம்பந்தங்களும் அநித்தியமாகும். ஆத்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பே நிலையானது. அந்தச் சம்பந்தத்தை அடைந்து விட்டால், எல்லாக் [illegible] கடவுள் [illegible]த்தவேண்டும். அநிலைச் செலுத்தி அஞ்ஞாயத்தில் இருந்து நாம்விடுதலையடையவேண்டும். நாம் ஏன் பிறந்தோம் என்று விசாரணைசெய்து அறிய வேண்டும். உள்ளத்தையும் அறிவையும்பயன்படுத்தி உண்மையான பொருள்கள் எவை பொய்யானபொருள்கள் எவை என்று மதுக்கறியவேண்டும். நாம் விசாரணை செய்தால் நமக்கு விவேகம் உண்டாகும். எந்தப் பொருள்கள் மீதும்பற்று வைக்காதே. கடவுளின் பாதத்தைமட்டும் நேசி. உலகிலே உள்ள அன்பு செய்வோரில் 99 வீதத்தவரும் போலிக்கே அன்புசெலுத்துகிறார்கள் அவர்களது அன்பு எல்லாம் உண்மையான அன்பு ஆகாது. கடவுளை எப்போதும் பிரார்த்தனைசெய்து பரமானந்த நிலையை அடையுங்கள். எல்லோருக்கும் சேவைசெய்து கடவுளை அடையுங்கள். கடவுளுக்காக உங்களை அர்ப்பணம் செய்யுங்கள்"

சுவாமிஜி இடையிடையே தமிழிலும் பேசினர். மேசடி மண்டபத்தில் ஆங்கிலம் தெரியாத பக்தர்கள் நிறைய இருந்தமையால் சுவாமிஜி தமிழிலே பேசினர். திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை நன்றியுரை கூறினர்.

## அன்னதான மண்டபம்

யாழ்ப்பாணம், வியா.

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் யாத்திரிகர்களின் அன்னதான சபையினர் நிரந்தர அன்னதான மண்டபத்தைக் கட்டி முடிப்பதில் தீவிரமுயற்சி எடுத்துள்ளனர். மண்டபக் கோப்புச வேலைக்கான வளை வைப்பு விழாவை நயினாதீவு பிரம்மஸ்ரீ ஐ கயிலாசநாதக் குருக்கள் தலைமையில நயினாதீவு வாசியும் கொழும்பு, யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகருமாகிய திரு. இ. செல்லையா ஆரம்பித்து வைத்தார். சபைக் காரியதரிசி திரு. க. வே. பரமலிங்கம் நன்றி கூறினர்.

## பதுக்கி வைப்பவர்மீது நடவடிக்கை

கம்பலைப்பிட்டி, புதன்

பொருள்களை பதுக்கிவைத்துக்கொண்டும் கூடுதலான விலைக்கு பொருள்களை விற்கும் வர்த்தகர்கள் மீதும் புகார்கள் செய்யப்பட்டால அவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வர்த்தக அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. ஜி. ஆர். டபிள்யு. டி' சில்வா அரசாங்க அதிபர்களுக்கும், காரியாதிகாரிகளுக்கும், கூட்டுறவு பரிசோதகர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்,

(5-ம் கலத் தொடர்ச்சி)

பண நெருக்கடி ஏற்படுவதும். இப்போது நிலைமை மாறி இருப்பதால் தொண்டமான் காங்கிரஸ் இவ்விஷயத்தை அலட்சியம் செய்யாமல் இதையும் ஒரு முக்கிய கோரிக்கையாகக் கேட்க வேண்டும். இந்த நியாயமான கோரிக்கையை தமிழ் எம். பி.க்கள் சேர்ந்து வற்புறுத்தினல் அரசாங்கம் இதை இச்சமயம் மறுக்கத் துணியாது.

• • •

மாதினையோர் கூறுகந்தாய்
மறைகொள் நாவா மதிசூடி
வானவர்கள் தங்கட்கெல்லாம்,
நாதனே யென்றென்று பரவி
நாளும் கைந்துருகி வஞ்சகமற்று
அன்பு கூர்ந்து, வாதனையால்
எப்பொழுதும் பூசை கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி
ஏத்திப் போற்றிக், காதன்மையால்
தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக்
காணலாமே,

— அப்பர் சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

ஒரு மிக நல்ல செய்தி. திருக்கேதீச்சரத்தில் சைவர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் ஏற்பட்டிருந்த ஒரு தகராறு, காணிமந்திரியின் நன் முயற்சியால் சுமுகமாகத் தீர்ந்தது இரு சமூகத்தவருக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

இருசார்பினரும் தமிழர்கள். அப்படியிருந்தும் அங்கு சமய வேற்றுமைகள் கிளம்பி, இரு சமயத்தவர்களுக்கும் நல்லுறவு குலைந்தது பலருக்கு மனவேதனையளித்தது. முன்னொரு காலத்தில் சமயவேற்றுமைகள் கிளம்பி மக்களைப் பிளவுபடுத்தியது உண்மையே. ஆனால் இப்பவோ காலம் பெரிதும் மாறிவிட்டது. சர்வசமய சமரசம் பேசப்படுகிறது. இச்சமயத்தில் தமிழர்களே தங்களுக்குள் சமயத்தின் பெயரால் சச்சரவிட்டுக் கொள்வது பெருமைப்படக் கூடியதன்று.

தங்கள் தகராறை இரு தரப்பினரும் விட்டுக் கொடுத்து சமாதானமாகத் தீர்த்துக் கொண்டது, மெத்தும் வரவேற்கத்தக்கது. ஓர் அன்பர் கூறுவதுபோல் நீதிமன்றத்துக்குச் சென்று வழக்காடி வெற்றிபெற்றாலும் மனக்கசப்பும், துவேஷமும்புகைந்து கொண்டிருக்கும், இரு சார்பினரும் நேரில் கலந்துபேசி, சமரசம் செய்து கொண்டதால் இனி இவ்விருசமயத்தவருக்கிடையிலும் புதிய நல்லுறவும் ஒத்துழைப்பும் ஏற்பட நல்ல சூழ்நிலை பிறந்துள்ளது. இந்த நல்ல முடிவுக்காகப் பலர் முயன்றிருப்பதாக அறிகிறேன். அவர்களனைவருக்கும் இரு சமூகத்தவரின் நன்றி கலந்த பாராட்டுகள் உரியதாகும்.

• • •

மலைநாட்டிலுள்ள தோட்டத் தொழிலாளர் சார்பாக, ஆறு கோரிக்கைகளை தொண்டமான் காங்கிரஸ் கேட்டிருப்பதாக ஒரு செய்தியைப் படித்தேன். தொண்டமானின் தயவால்தான் யு. என். பி.க்கு மலைநாட்டில் பல ஸ்தானங்கள் கிடைத்ததால் அந்தக் கோரிக்கைகளை இந்த அரசாங்கம் அலட்சியம் செய்ய முடியாது.

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளரின் குழந்தைகளுக்கு பலவருட காலமாக ஒரு பெரிய பாவம் செய்யப்பட்டு வருகிறது. அதாவது "கேர்" என்ற அமெரிக்க தர்மஸ்தாபனத்தார் இலங்கைக்கு இலவசமாக அளிக்கும் பால் மாவுடரும், மாவும் தீவிலுள்ள எல்லாப் பள்ளிக் குழந்தைகளுக்கும் பாலாகவும், பணிஸாகவும் வழங்கப்படுகையில் இந்தப் பாலும், பணிஸும் தோட்டத் தொழிலாளரின் ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதில்லை, ஏன் தெரியுமா? அவர்கள் நாடற்றவர்களின் பிள்ளைகளாம்! அந்தப் பிள்ளைகளுக்கு எப்படி இருக்கும்!

இலங்கையிலுள்ள "கேர்" ஸ்தாபனத்தின் பிரதிநிதி ஸாலிவன் என்பவர் யாழ்ப்பாணத்திலே 'ரோட்டரி'சங்க கூட்டத்தில் மூன்றாநாள் வந்து பேசினர். அவரை இதுபற்றி விசாரித்தேன். தோட்டக்குழந்தைகளுக்கு பாலும், பணிஸும் ஒன்றும் கொடுபடவில்லை என்றும் தாங்கள் பலமுறையும் அரசாங்கத்திடம் கூறியும் பயனில்லை என்றும் சொன்னர்.

மனிதநீதியைப்பற்றிப்பேசப்படும் காலம் இது. இலங்கையின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருக்கும் அப்பாட்டாளி மக்களின் குழந்தைகளுக்கு இந்தப் பாலும் பணிஸும் மறுப்பது பெரிய பாவமல்லவா?

இந்தப் பாவத்தின் கர்மபயன்தான் தனிலை விலை குறைவதும், அரசாங்கத்துக்குப்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசிய-ஆபிரிக்க வெளிமந்திரிகள் இன்று அல்ஜியர்ஸில் கூடுகின்றனர்

## உச்சித்தலைவர்கள் மகாநாடு நடைபெறுவது பற்றி சந்தேகம்

### சீனா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஐ. அ. குடியரசு ஒத்திவைப்பை விரும்பவில்லை

அல்ஜியர்ஸ், ஜூன் 23

நாளை திட்டமிட்டபடி அல்ஜியர்ஸில் ஆசிய ஆபிரிக்க வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தியா, சீனா உட்பட 25 நாடுகளின் பிரதிநிதிகள் ஏற்கெனவே அல்ஜியர்ஸ் வந்து சேர்ந்துவிட்டனர்.

எனினும் வருகிற 29-ம் திகதி திட்டமிட்டபடி ஆசிய-ஆபிரிக்க உச்சித் தலைவர்கள் மகாநாடு நடைபெறுமா என்பது இன்னும் சந்தேகத்துக்கிடமாய் இருப்பதாகத் தெரிகிறது. இவ்விஷயத்தை வெளிமந்திரிகள் முடிவு செய்வார்கள்.

சீனா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபிக்குடியரசு ஆகிய நாடுகள் மகாநாட்டை ஒத்திவைக்க விரும்பவில்லை என அறிவிக்கப்படுகிறது.

அல்ஜீரியாவில் பதவி வீழ்த்தப்பட்ட ஜனாதிபதி பென்பெல்லாவுக்கெதிராக மேலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பென்பெல்லாவை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களைக் கலைக்க கண்ணீர்ப்புகை உபயோகிக்கப்பட்டது.

1800 பென்பெல்லா ஆதரவாளர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பென்பெல்லா உயிருடன் இருப்பதாயும், சிறை வைக்கப்பட்டிருப்பதாயும் புரட்சி அரசாங்கம் உத்தியோகமுறையில் அறிவித்திருக்கிறது.

## இங்கிலாந்து வெற்றி

லார்ட்ஸ், ஜூன் 28

இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற 2வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. ஸ்கோர் விபரம்:

இங்கிலாந்து

1ம் இன்னிங்ஸ்: 307 ரன்கள்.

2ம் இன்னிங்ஸ்: 3 விக்கெட் 218 ரன்கள்.

நியூஸிலந்து

1ம் இன்னிங்ஸ்: 175 ரன்கள்.

2ம் இன்னிங்ஸ்: 347 ரன்கள்.

## சினிமா நடிகைக்கு நாடக மோகம்

மேற்குப்பெர்லின், ஜூன் 28

சர்வதேசப் புகழ்பெற்ற திரைப்பட நடிகையான ரோமி ஷினைடருக்கு இப்பொழுது நாடகங்களில் நடிக்கவேண்டுமென்ற மோகம் திடீரென ஏற்பட்டிருக்கின்றது. முதன் முதலாக ஜெர்மன் நாடகம் ஒன்றில் அவர் விரைவில் நடிக்கவிருக்கின்றார், இந்த நாடகத்தைப் பிரபல ஜெர்மன் டைரக்டர் ஹேரி மேயன் இயக்குவார். ஆனால் நாடகம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை, 'முதல் நாடகமே பெரும் வெற்றிபெறும் வகையில், ரோமி ஷினைடருக்குப் பொருத்தமான வேடம் கொண்ட நாடகத்தை நான் தேடிவருகிறேன்" என்று டைரக்டர் கூறினார். ரோமி ஷினைடரும், டைரக்டர் மேயனும் சமீபத்தில் பொது இடங்களில் ஒன்றாகக் காணப்பட்டதை யொட்டி இருவருக்கும் திருமணம் நடக்கப்போவதாகப் பலத்த வதந்திகள் உலவிவருகின்றன. இது உண்மையா என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை.

## பிரச்சனை தீர நிபந்தனை

பெர்லின், ஜூன் 28

வியட்நாம் பிரச்சனையையும், டொமினிக்கன் பிரச்சினையையும் தீர்ப்பதற்கு முதல் நடவடிக்கையாக இவ்விரு நாடுகளிலிருந்தும் அமெரிக்கத் துருப்புகள் வாபஸ் செய்யப்பட வேண்டும் என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வெளிவிவகார இலாகா உயர்தர அதிகாரி ஒருவர் பத்திரிகை நிருபர் மகாநாட்டில் கூறினார்.

இவ்விரு பிரச்சனைகளையும் சர்வதேசப் பிரச்சனைகளாக்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் செய்யும் முயற்சி பற்றிய கேள்வியொன்றுக்கு அவர் பதிலளிக்கையில், அதனால் இவ்விரு நாட்டிலுள்ள உண்மையான நிலைமையில் மாற்றம் ஏற்படாதென்றும் இது தெளிவான ஆக்கிரமிப்புதான் என்றும் கூறினார்.

## வாலிபர் குற்றங்கள் குறைகின்றன

பெர்லின், ஜூன் 28

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் இளைஞர்கள் செய்யும் கிரிமினல் குற்றங்கள் தொடர்ந்து குறைந்து வருகின்றன. 1949 - 1964 க்குமிடையே இக்குற்றங்கள் 42 சதவீதம் குறைந்து விட்டதாக அட்டோர்னி ஜெனரல் கூறினார்.

வாலிபர்கள் கோஷ்டியாகச் சேர்ந்து குற்றங்கள் இழைத்தல் அடியோடு நின்றுவிட்டதென்றும், அவர்கள் தனித்தனியாகக் குற்றங்கள் புரிதல் மட்டும் இன்னும் நடைபெறுகிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார், வாலிப கோஷ்டிகள் வங்கிகளைக் கொள்ளையிடுதல், அபின் போன்ற போதைப் பொருட்களை விற்பனை செய்தல் இப்பொழுது கிடையாது. இளம்பெண் விபசாரிகளும் நாட்டிலே கிடையாது. காரணம் அத்தகைய குற்றங்கள் செய்வதற்கான சமுதாய அமைப்பு இங்கு இல்லாதிருப்பதே

## நீச்சல் ஜோடிக்கு நீரில் திருமணம்!

சிசிலி, ஜூலை 23

நீர் விளையாட்டுக்காரர்களான இத்தாலியின் நீர்விளையாட்டு வீரர் செக்கியோராக்கோவும் நீச்சலழகி மஜாலியும் தங்கள் திருமணவிழாவைத் தண்ணீருக்குள் நடாத்தத் தீர்மானித்துள்ளனர். இவர்களுடைய திருமணம் ஜூலை மாதம் முதலாந்தேதி உஸ்டிகாதீவுக்கு அருகே தண்ணீருக்குக் கீழுள்ள ஒரு சிறு தேவாலயத்தில் நடைபெறும், ரோமன் கத்தோலிக்க குரு இவ்விருவரையும் தம்பதியராக்குவார்.

## எவரெஸ்ட் வீரர்களுக்கு விருது

புதுடில்லி, ஜூன் 28

11 எவரெஸ்ட் வீரர்களுக்கு இன்று பத்மபூஷன், பத்மஸ்ரீ ஆகிய கௌரவ விருதுகளை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

## வில்ஸன்

லண்டன், ஜூன் 28

பிரிட்டனில் ஏற்பட்டுள்ள காமன்வெல்த் குடியேற்றம் பற்றிப் பிரதமர் வில்ஸன், சம்பந்தப்பட்ட பிரதம மந்திரிகளுடன் பேச்சு நடத்தினார்.

## லூதர் ஞாபகார்த்த நிலையங்கள்

பெர்லின் 'ஜூன் 28

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் விட்டன்பர்க், எயிஸ்லபன் என்னும் இடங்களிலுள்ள மார்ட்டின் லூதரின் ஞாபகார்த்த நிலையங்களைத் தரிசிக்க உலகில் பல பகுதிகளிலிருந்து வருடந்தோறும் சமார் 20,000 யாத்திரிகர்கள் விஜயம் செய்கின்றனர்,

1517ல் விட்டன்பர்க்கிலுள்ள ஒரு தேவாலயத்தின் தலைவாயிலில் தான் மார்ட்டின் லூதர் தமது 95சித்தாந்தங்களை வைத்து ஆணி அறைந்தார்.

அவர் எழுதிய புத்தகங்களும், அவரது ஏனைய தஸ்தாவேஜுகளும் லூதர் மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன உலகில் பல்வேறு நாடுகளில் பிரசுரிக்கப்பட்ட அவரது நூல்களின் பிரதிகளும் அவரைப்பற்றி எழுதப்பட்ட நூல்களின் பிரதிகளும் சமார் 13000 அங்குள்ள ஒரு நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

சீர்திருத்த வாதியான மார்ட்டின் லூதர் எயிஸ்லபன் நகரில் 1483ல் பிறந்தார். 1546ல் காலமானார். அவர்பிறந்த இல்லம் இன்று லூதர் பொருட்காட்சி சாலையாக விளங்குகிறது. அவர் இறந்த வீடு அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதில் அவர் எழுதியஇரு கடிதங்களும் அவரது மரண சாசனமும் வைக்கப்பட்டுள்ளது.

## ஏவுகணைகளை அழிக்கும் அசுர ரஷ்ய ராக்கெட்டுகள்

மாஸ்கோ, ஜூன் 23

எதிரியின் எந்த விதமான ஏவுகணைகளையும் அழிக்கக்கூடிய அசுரசக்தி வாய்ந்த ராக்கெட்டுகள் சோவியத் படைகளுக்கு அளிக்கப்பட்டிருப்பதாய் இங்கு பிரசுரமாகும் வாரப்பத்திரிகை ஒன்று கூறுகிறது.

சோவியத் ரஷ்யாவின் கேந்திரஸ்தானங்களை அணு ஆயுத தாக்குதல் அபாயத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ஏவுகணைகளை அழிக்கக்கூடிய ராக்கெட்டுகள் நிறுவப்பட்டிருப்பதாகச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஏவுகணை சம்ஹார ராக்கெட்டுகள், கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கக்கூடிய ராக்கெட்டுகள் ஆகியவற்றின் படங்கள் அதில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

## சீன-வடவியட்னும் எல்லையில் அமெரிக்க விமான தாக்குதல்

### சப்ளை பாதைகள் அழிக்கப்பட்டன

சைகோன், ஜூன். 28

அமெரிக்க, தென்வியட்னும் விமானங்கள் நேற்று ஹொனோயிக்கு வடக்கே சீன எல்லைக்கருகில் [வடவியட்னும் இலக்குகளைத் தாக்கின என்றும், இது தான் வட வியட்னுமில் நடத்தப்பட்ட பெரிய ஊடுருவல் என்றும் அறிவிக்கப்பட்டது.

சீனாவிலிருந்து இந்த இலக்குகள் வழியாகத் தான் வியட்காங்கியருக்கு சப்ளைகள் வருவதாகக் கருதப்படுகிறது. தாக்குதலில் 2 பாலங்கள் அழிந்தன என்றும், இராணுவ பாசறைகளும், படகுகளும் சேதப்படுத்தப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

2 அமெரிக்க விமானங்கள் இத்தாக்குதலின்போது சுட்டு வீழ்த்தப்பட்டதாய் வடவியட்னும் கூறியது. ஆனால் அனைத்தும் பத்திரமாய்த் திரும்பியதாக சைகோன் செய்திகள் அறிவித்தன.

பிலிப்பைன்ஸிலிருந்து சென்ற அமெரிக்க விமானங்கள் வியட்காங் இலக்குகளைத் தாக்கி 29 கட்டிடங்களையும், ஒரு வெடிமருந்துக் கிடங்கையும் அழித்ததாக மேலும் அறிவிக்கப்பட்டது.

வியட்காங்கியர் வைத்திருந்த கண்ணிவெடி காரணமாக ஒரு ஜீப்விபத்துக்குள்ளாகியதில் 2 அமெரிக்கர் கொல்லப்பட்டனர்.

## பக்தூனியப் போராட்டம்

கல்கத்தா, ஜூன் 28

பக்தூனிஸ்தான் மக்களைப் பாகிஸ்தான் கொடுமைப்படுத்துவதாயும், வானத்திலிருந்து குண்டுவீசிப் படுகொலைசெய்வதாயும் எனினும் பக்தூன் மக்கள் சுதந்திரப் போராட்டத்தைக் கைவிடமாட்டார்களென்றும் அந்நாட்டுப் பிரதிநிதி இங்கு கூறினார்.

## சீனா தாக்கும் என எதிர்பார்த்தோம்

கோயமுத்தூர், ஜூன் 28

இந்தியாவுக்கும் கம்யூனிஸ்ட் சீனாவுக்குமிடையே தகராறு ஏற்படும் காலம் ஒன்று வரும் என தானும், தமது தந்தை நேருவும் 1954-ம் ஆண்டிலேயே எதிர்பார்த்ததாக ஸ்ரீமதி இந்திராகாந்தி ஒரு பொதுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் கயானாவுக்கு தேசிய அரசாங்கம் வேண்டும்

### காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் இந்தியா, டிரினிடாட் வற்புறுத்தல்

லண்டன், ஜூன் 23

நேற்று காமன்வெல்த் பிரதம மந்திரிகள் சர்வதேச நிலைமை பற்றியும், ரொடீஷியா தவிர இதர காலனிகள் பற்றியும் விவாதம் நடத்தினர். பிற்பகல் மகாநாட்டில் படை குறைப்பு பற்றி விவாதம் நடைபெற்றது.

சீனா அணுவல்லரசாகியிருப்பது கவனிக்கவேண்டியது அவசியம் என்று அப்போது சாஸ்திரி கூறினார், இந்தியப் பிரதமர் 40 நிமிடம் முக்கிய உரை நிகழ்த்தியதாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் கயானா சுதந்திரம் பெறும்வரை அங்கு ஒரு தேசிய [illegible] வேண்டும் என்று [illegible] யோசனை கூறியதுடன் பெரும்பான்மைக்கட்சியின் விருப்பத்திற்கு மாறாக விகிதாசார பிரதிநிதித்துவ அரசாங்கம் நிறுவப்பட்டிருப்பது குறித்து கண்டனம் தெரிவித்தார். இந்தியாவில் இதே கொள்கை நாட்டுக்கு தீமையை விளைவித்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

டிரினிடாட் பிரதமர் திரு எரிக்வில்லியம்ஸ் திரு. சாஸ்திரியின் கருத்தை ஆதரித்துப் பேசினார்.

இதற்கிடையில் இங்கிருக்கும் கானா பிரதிநிதிகள் லண்டனிலுள்ள சீன தூதராலயத்துடன் உத்தேச சமாதான கோஷ்டி பற்றி பேச்சுநடத்தி வருவதாயும், பீகிங்குடனும் தொடர்புகொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

திரு. வில்சன் தலைமையிலோ அல்லது அவர் இல்லாமலோ காமன்வெல்த் சமாதான தூது கோஷ்டியை சீனா ஏற்குமா இல்லையா என்பதை அறிய கானா முயன்றுவருவதாய்ச் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் சமாதான தூதுகோஷ்டி பற்றி மாஸ்கோ, பீகிங் ஆகிய இடங்களிலிருந்து பதில் கிடைக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

தூது கோஷ்டி விஜயம் செய்ய உத்தேசித்திருக்கும் எல்லா நகரங்களுக்கும் இது பற்றி செய்தி அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹாக்கி சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா

யாழ். ஹாக்கிச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் டாக்டர். ஜே. எஸ். துரைசிங்கம் பேசும் போது; "இம்முறையும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் ஹொக்கி கோஷ்டியை அகில இலங்கைப் பாடசாலைகள் நடாத்தும் ஹொக்கி விளையாட்டில் பங்கு பெறுவதற்கு எல்லோரும் இயன்றளவு உதவி செய்ய வேண்டும் என்றும் அப்பொழுதுதான் யாழ்ப்பாணத்தில் ஹொக்கி என்னும் விளையாட்டு முன்னேறும் என்றும் கூறினர்.

பின் வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- டாக்டர். ஜே. எஸ். துரைசிங்கம் உபதலைவர்- ஈ. சபாலிங்கம், கே. பத்மநாதன். டி. டி. ஜெயரத்தினம்' ஈ. ஏ. சண்முகநாதன், ஏ. எச். டபிள்யூ பெரேரா, ஜோர் மானட், வ. சுப்பிரமணியம், டி. செனரத் டாக்டர், டபிள்யூ. சிவகுருநாதன் காரியதரிசி- கே. அரியராசா உபகாரியதரிசி- கே. பூபாலசிங்கம் தனாதிகாரி- கை. அல்வைனஸ் விளையாட்டுஸ்தாபன மேற்பார்வையாளர்- வி. ரி. கேணசலிங்கம் தெரிவுக் குழு- டாக்டர். துரைசிங்கம், கே. அரியராசா, ஏ. க. மகாதேவா, ஜ, மாண்டி, எஸ். இராசசிங்கம், அல்பட் ராசையா

---

## 'முன்னுள் அரசாங்கத்தினுல் நன்மை இல்லை'

வாரியப்பொல, புதன்

'முந்திய அரசாங்கத்தினுல் எதுவிதமான நன்மைகளும் எமக்கு வந்துசேரவில்லை அவர்கள்விட்டு விட்டுச்சென்றது ஒன்று உண்டு. அது தான் கிதியில்லாத நிலைமை' என்று தேசிய சேவ்வ பாராளுமன்றக் காரியதரிசி திரு. டி. பி. வெலகெதிரா ஓர் கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

## உத்தியோகஸ்தர் தெரிவு

யாழ்ப்பாணம், வியா

இணுவில் ஸ்ரீ முருகன் சனசமூக நிலயத்தின் 16-வது வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவும் திரு. த. தம்பியின் தலைமையில் நடைபெற்றது. எதிர்வரும் ஆண்டு நிறைவு விழாவை கலைவிழாவாக நடாத்தத்தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகஸ்தர்கள் விபரம்:- தலைவர்: திரு. இ. திருநாவுக்கரசு. உபதலைவர்: திரு. த. தம்பி, இணைக் காரியதரிசிகள்: திரு. க. சங்கரசிவம், திரு. க குலேந்திரன் தனாதிகாரி: திரு. செ. சுப்பிரமணியம்.

இருபத்தொரு பேர்கொண்ட செயற்குழும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## 'வாக்குறுதிகள் செயற்படுத்தப்படவில்லை'

பண்டாரகம, புதன்

'ஐக்கியதேசியக்கட்சி தேர்தல் காலத்தில் கூறிய வாக்குறுதிகளை நடைமுறைக்கு கொண்டுவராததை தற்பொழுது மக்கள் நன்கு உணர்கின்ருர்கள்' என்று திரு. லெஸ்லி குணவர்த்தன பண்டாரகவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

கடந்த தேர்தலின்போது அரசியலில் பங்கு பற்றிய ஆசிரியர்களின் மாற்றத்தை எதிர்க்கும் முகமாக நடைபெற்ற இக்கூட்டத்திற்கு பனேங்கார நாயகதேரோ தலைமை வகித்தார்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா

வலிகிழக்கு தமிழாசிரியர் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:— தலைவர் திரு. க. இ. குமாரசுவாமி, காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம், உபதனாதிகாரி திரு. இ. துரைசிங்கம், உபதலைவர்கள் திருவாளர்கள் சி. சிவசம்பு, இ. திருமேனி, கு. சபாரத்தினம், உபகாரியதரிசி திரு ம. க. நடராசா. நிர்வாகசபை அங்கத்தவர்கள் 10 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## நிரந்தரமான சபை நிறுவ முடிவு

கொழும்பு, புதன்

இலங்கை போக்குவரத்து சபையில் நிகழும் எல்லா இடமாற்றங்கள் பற்றியும் முடிவு செய்யும் ஒருநிரந்தர சபையை நிறுவ இலங்கை போக்குவரத்துசபை அதிகாரிகள் நேற்றுத் தீர்மானித்துள்ளனர்,

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் செய்துகொண்ட முடிவின்படி இச்சபையில், தலைவர், ஜெனரல் மனேஜர், அதகாரியெருவர், திறைச்சேரி உத்தியோகத்தர் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

---

## ஸ்தானிகர் விலகுவார்

கொழும்பு, புதன்

பீக்கிங்கிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு. எஸ். எப். டி. சில்வா, சுகயீனம் காரணமாக பதவியிலிருந்து விலகிக்கொள்வார் என்றும் சில தினங்களில் அவர் இலங்கை வந்துசேருவார் என்றும்தெரிய வருகிறது,

திரு. சில்வா, பீக்கிங்கில், இலங்கை ஸ்தானிகராக ஒரு வருடமாக கடமையாற்றிவந்துள்ளார்.

---

## தொழிலாளர் பகிஷ்கரிப்பு

பம்பலப்பிட்டி, புதன்

காவல்காரர் சேவையாளரையும் வேறு சிலரையும் வேலைசுமர்த்தியதன் காரணமாக துறைமுக கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த இலங்கை வர்த்தக சங்கம் தற்பொழுது துறைமுகத்தில் வந்திருக்கும் உணவுக் கப்பல்களில் வேலை செய்யாது பகிஷ்க்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்,

---

## ஸ்தாபகர்தின விழா

குரும்பசிட்டி, புதன்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் வியாழக்கிழமை கல்லூரி திறந்த வெளியரங்கில் கொண்டாடப்படும். கல்லூரி அதிபர் திரு. ரி. ரி. ஜெயரத்தினம் தலைமை தாங்கும் இவ் விழாவுக்கு இலங்கை வங்கி பொது மனேஜர் திரு. வி. லோகநாதன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். திருமதி லோகநாதன் பரிசுகள் வழங்குவார்.

---

## நாடகமன்றம்

சாவகச்சேரி, புதன்

"சமதர்மக் கருத்துக்களை நாடகங்கள் மூலம் மக்கள் மத்தியிலே தோற்றுவித்து சமுதாய சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டியது நடிகர்களுடைய கடமை" என்று பரந்தன் கலைவாணி நாடக மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமைவகித்த திரு. கே. வி. மகாலிங்கம் கூறினுர். இக் கூட்டம் பரந்தன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி. பி. சர்மா, உபதலைவர் எஸ். கணபதிப்பிள்ளை. காரியதரிசி கே. ஜெயராசசிங்கம், உபகாரியதரிசி க, வடிவேலு, தனாதிகாரி நா. கந்த... ... நிர்வாகசபை உறுப்பினர் ... தெரிவுசெய்யப் பட்டனர்.

## கழகங்களின் விளையாட்டுப்போட்டி

சண்டிலிப்பாய், புதன்

சண்டிலிப்பாய் ஹாலிவூட் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி சண்டிலிப்பாய் கொட்டாதோட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. வாணி நிகேதன வித்தியாசாலை தலைமை ஆசிரியர் திரு. ச. ஆறுமுகம் விளையாட்டுப் போட்டிக்கு தலைமை தாங்கினர்.

விளையாட்டுப் போட்டியில் நேரு இல்லம் 141 புள்ளிகளையும் காந்தி இல்லம் 118 புள்ளிகளையும்பெற்று முறையே 1-ம், 2-ம் இடங்களைப் பெற்றன, போட்டி முடிவில் பார்வையாளர்களுக்காக நடைபெற்ற அஞ்சலோட்டப் போட்டியில் ஹாலிவூட் கழகத்தைதினரை எதிர்த்து சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் சங்கமும் சண்டிலிப்பாய் டிங்கிரி கழகமும், தொட்டிலடி இளம்விவசாயிகள் சழகமும் போட்டியிட்டன. ஹாலிவூட் கழகம் முதல் இடத்தையும் சங்கானை இந்துமுற்போக்கு வாலிபர்சங்கம் இரண்டாம் இடத்தையும், சண்டிலிப்பாய் டிங்கிரிகிளப் மூன்றும் இடத்தையும் பெற்றன. ஹாலிவூட் கழகக் காரியதரிசி திரு. ச. சபாரத்தினம் நன்றி தெரிவித்தார்.

---

## சுகாதாரப் பகுதி உதவி அதிபர்

பருத்தித்துறை; புதன்

பருத்தித்துறை (புலோலி) அரசினர் வைத்தியசாலைக்கு சுகாதாரத்துறை உதவி அதிபர் டாக்டர் ஜெயசேகரா, வட்டபகுதி உதவி அத்தியட்சகர் டாக்டர் எஸ். இராசரத்தினத்துடன் உத்தியோக பூர்வமாக விஜயம் செய்தார்.

வைத்தியசாலை வேலைகளையும் நோயாளர் விடுதிகளையும் பார்வை இட்டதுடன் உணவுப் பொருள்களையும் பரிசீசித்துப் பார்த்தார்.

வைத்திய சாலையின் தேவைகள்பற்றி வைத்திய அதிகாரி திரு. சோமசுந்தரத்துடன் உரையாடி புதிதாகக் கட்டப்படும் நிர்வாகக் காரியாலயம் விடுதி ஆகியவைகளையும் பார்வையிட்டுச் சென்றுர்.

---

## தமிழ் கலவன் பாடசாலை வெற்றி

கண்டி, புதன்

கண்டி மாவட்ட உதைபந்தாட்டக்குழுவினரால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியில் கண்டி சி. சி. தமிழ் கலவன் பாடசாலை, கண்டி சென், போல்ஸ் கல்லூரியை 6—0 கோல்களால் வெற்றிவிட்டியது.

## மண் சரிவினுல் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

பறைச்சேரிவழியில் மண் வெட்டிக் கொண்டிருந்த கந்தையா அப்பாபிள்ளை என்பவர் மண்சரிவு காரணமாக மண்ணுள் புதையுண்டு மரணமானுர். இவருடன் மண்வெட்டிக் கொண்டிருந்த மற்றொருவர் படுகாயமுற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையின்போது சாட்சியமளித்த சண்முகம் குலவீரசிங்கம் என்பவர் தமது டிராக்டருக்கு மண் ஏற்றுவதற்காக காலம் சென்றவர் மண்வெட்டிக் கொண்டிருந்தாரென்றும் அவர் மண்வெட்டிக் கொண்டிருந்தபோதே மேற்படி சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவித்தார்,

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரிதிரு. ஏ. அமிர்தலிங்கம் விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

---

## யாழ். தியேட்டர்களின் சீர்கேடுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் நகரில் உள்ள சினிமா தியேட்டர்களில் நிலவும் சுகாதாரக் குறைவுபற்றியும் அசௌகரியங்கள்பற்றியும் புகார் தெரிவித்து யாழ். நகர் சீர்திருத்த இயக்கம் சுகாதார மந்திரிக்கும் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கும் மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளது,

இங்கு நிலவும் சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய மேற்படி சங்கம் சில யோசனைகளைத் தெரிவித்துள்ளது.

தியேட்டர்களில் குறிப்பிட்ட அளவு டிக்கட்டுகளை மட்டும் விநியோகித்தல், கலரி உட்பட மற்ற வகுப்புகளுக்கும் மின்சார விசிறிகளை நவீன முறையில் அமைத்தல், தியேட்டர்களில் புகைபிடித்தலைத் தடுத்தல் ஆகியவை தெரிவிக்கப்பட்டுள்ள சில யோசனைகள்,

இதுபற்றி யாழ்ப்பாணமேயருக்கும் 5-ம் வட்டார அங்கத்தவருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது,


REGAL - JAFFNA
NOW SHOWING
Ray Danton
Jayne Mansfield
in
THE GEORGE RAFT STORY






திறீ கொயின்ஸ்

சந்தேகத்திற்கே யிடமில்லாத உன்னத லாகர்.

மேக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

விநியோகஸ்தர்கள்:- ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிடெட், கொழும்பு



கடைசி 3 தினங்களுக்கு மட்டும்

கிங்ஸ்லி (கொழும்பு)

தினசரி 2-00, 6-00, 9-30

★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

பச்சை விளக்கு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 6-00, 9-30

டீவரையோ

(சிங்களம்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்

1, செம்பியன்பற்று கிராம சபைத் தலைவரால் 9-7-65-ம் திகதி காலை 10 மணிவரை புயலழிவு றோட்டு திருத்த வேலைக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 கேள்விகள் 8-7-65-ம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரையும், ரூபா 25/-கேள்விப்பிணையும், ரூபா 5/- கேள்விப்பத்திர கிரயமும் செலுத்துவதன் பேரில் கொடுக்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திர கிரயம் திருப்பிக்கொடுக்கப் படமாட்டாது.

3. மற்றும் விபரங்கள் சபையின் அலுவலகத்திலும் வடபிரதேச (மேல்) உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

(ஐ. ஆ. ஐயம்பிள்ளை)
தலைவர்
செம்பியன்பற்று கிராமசபை
கிராமசபை அலுவலகம்,
செம்பியன்பற்று.
22.6 65 485

## புதிய தமிழ் ஆசிரியர் சங்கம்

கண்டி, புதன்

அகிலஇலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மத்திய மாகாண கிளைச் சங்கத் தலைவர் திரு. க. மதியாபரணம் தலைமையில் நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாலயத்தில் நடைத்திய கூட்டத்தில் மேற்படி கிளைச்சங்கம் சென்ற மாதம் 21-ந் திகதி கூடிய போது அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மீது நிறைவேற்றிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குஅகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் அனுப்பிய பதில் பற்றி பரிசீலனை செய்யப்பட்டது.

பரிசீலனையின்போது தாய்ச் சங்கம் அனுப்பிய பதில் திருப்திகரமான பதிலாக இருக்கவில்லை என்ற காரணத்தை முன்னிட்டு அப்பதில் ஏகமனதாக நிராகரிக்கப்பட்டு தாய்ச்சங்கத்திலிருந்து பிரிவதென்ற முன்னைய தீர்மானம் உறுதிப்படுத்தப்பட்டது.

மத்திய மாகாண தமிழ் ஆசிரியர்களது பொதுக்கூட்டத்தை இம்மாதம் 27-ந் திகதி கூட்டுவதென்றும் வெளி மாகாண ஆசிரியர் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்வதென்றும் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேற்படி பொதுக்கூட்டத்துக்கு அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் பொதுக்காரியதரிசி, நிர்வாகக் காரியதரிசி ஆகியோரை அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

**வியாழன் 24-6-65**

**கொழும்பு**

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை 6-45 சாதகஞ்சலி 6-50 லசவகற்சிந்தனை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-25 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-40 தமிழோடிசை, 7-15 வயலின், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வயலின். 9-30 கேயர்விருப்பம், 10-00 சிலைதுணுப்பதிவுகள்.

## 'வசதிக்கட்டணங்கள் அபிவிருத்திக்கு உதவி'

### காரியாதிகாரி கருத்து

பருத்தித்துறை, புதன்

பாடசாலைகளில் மாணவரின் வசதிக் கட்டணங்கள் பல்வேறு அபிவிருத்தி வேலைகட்கும் பயன்படுகின்றன. அதைச் செலுத்தாதுவிட அதிகமானோர் முயல்வதுடன் அதன்பேரில் அதிகாரிகளுக்கான அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். அந்தநேரங்களில் உழைப்பதால் அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்முடியும் அன்றியும் பாடசாலை மாணவிகள் பெற்றோர் தமது ஓய்வுநேரத்தில் வெங்காயக்கூடு பின்னல் போன்ற சிறு தொழில்களைப் புரிவதால் இதைவிடக் கூடுதலான பணத்தையே உழைத்து விடமுடியும் இத்துறையில் மாணவர்கள் நிச்சயம் ஊக்கப்படுத்தப்படவேண்டும்"

இவ்வாறு வடமராட்சிக்காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிகளுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

நான்கு இல்லங்கட்கிடையே நடைபெற்ற போட்டிகளில் 250 புள்ளிகளைப் பெற்ற சிவப்பு இல்லம் முதல் இடத்தைப் பெற்றது. பச்சை, நீல, மஞ்சள் இல்லங்கள் முறையே 173, 160, 134 புள்ளிகளைப் பெற்று முறையே 2-ம், 3-ம், 4-ம் இடங்களைப்பெற்றன.

அணிவகுப்பில் சிவப்பு, நீல பச்சை. மஞ்சள் இல்லங்கள் முறைப்படி 1-ம், 2-ம், 3-ம், 4-ம் இடங்களைப்பெற்றன,

### சாம்பியன்கள்

மேற்பிரிவு: இந்திராணி கனகசபை, கமலேஸ் சுப்பிரமணியம்.

மத்தியபிரிவு: இராசேஸ்வரி சின்னத்தம்பி, பூலோகசுந்தரி இராமலிங்கம்,

கீழ்ப்பிரிவு: வசந்தகுமாரி சம்பந்தர், மாதினி இரத்தினவேல்,

கீழ்ப்பிரிவு ஆண்: எஸ். இராசேந்திரன்.

பாலர்பிரிவு ஆண்: சக்கீன் அப்துல்காதர்.

திருமதி தே. டி. ஆர்னல்ட் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களைவழங்கிக் கௌரவித்தார்.

## படைக் குறைப்புக்கு மக்கள் மனு

போன், ஜூன் 23

பல்வேறு அணு ஆயுதங்களைக் கொண்ட படையில் மேற்கு ஜெர்மன் அரசாங்கம் பங்குபற்றுவதையும், இராணுவத்துக்கு அணு ஆயுதங்கள் வழங்குவதையும் மேற்கு ஜெர்மன் பாராளுமன்றம் கண்டிக்க வேண்டுமென்றும், மத்திய ஐரோப்பாவில் அணு ஆயுதம் அற்ற ஒரு சமாதான பிரதேசத்தை ஏற்படுத்துவது பற்றியதிட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கோரி 22,000 ஜெர்மன் மக்கள் கையெழுத்திட்ட ஒருமகஜர் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையும் பங்குபற்றியது

பெர்லின், ஜூன் 23

1945 ஜூன் 15-ம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் 20 வது ஆண்டு விழாவில் உலகில் பல பகுதிகளிலுமிருந்து வந்த பல்வேறு தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை, அல்ஜீரியா, ஏடன், கொங்கோ, கானா, கினியா, இந்தோனேஷியா, இந்தியா, ஜப்பான், சிரியா, நைஜீரியா முதலிய நாடுகளின் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், உலகத் தொழிற்சங்கச் சம்மேளனம், அகில ஆபிரிக்கத் தொழிற்சங்க சம்மேளனம் முதலிய ஸ்தாபனங்களின் பிரதிநிதிக

## சுகாதார வார நிகழ்ச்சிகள்

பருத்தித்துறை, புதன்

'பொதுச்சுகாதாரம் வளரும் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றது. சுகமும்பலமுமுடைய ஒருசமுதாய அமைப்புத்தான் நாட்டில் நல்வாழ்வையும் பொருளாதார வளத்தையும் அளிக்கவல்லது. சுகாதாரப் பிரசாரம் அவசியமேயென்றாலும் அதைவிட சுகவாழ்வுக்கான வசதிகளும் அரசாங்கத்தால் அளிக்கப்பட வேண்டியது மேலும் அவசியமானதாகும். சுகாதாரவார காலத்தில் மட்டுமல்லாது தினமும் சுகவாழ்வுக்கான வழிகளை நாம் பின்பற்றவேண்டியது அவசியமாகும். நாம்மட்டும் சுகமாக வாழ்வதுடன் நின்றுவிடாது மற்றவர்களுக்கும் சுகமாகவாழ வழிவகுத்துக் கொடுப்பது நம்மெவ்வொருவரதும் கடமையுமாகும்."

இவ்வாறு பருத்தித்துறை நகரமுதல்வரும் வடமராட்சிப் பகுதிச் சுகாதாரவார விழாச் சபைத்தலைவருமான திரு. நடராசா அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயமுன்றிலில் செனக்கியக்மொழியை ஏற்றிவைத்துப் பேசுகையில் கூறினார்.

செம்பியன்பற்று உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய ஸ்தலஸ்தாபனத் தலைவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்துச்செய்திகள் அலங்கரிக்கப்பட்டமாட்டுவண்டிப் பவனிமூலம் மேளவாத்தியங்களுடன் ஸ்தலத்தை வந்தடைந்தன.

சுகாதார வைத்திய அதிகாரி திரு. ஏ. வி. ஜீவநாயகம் செய்திகளை ஏற்றுத் தலைவரிடம் ஒப்படைத்தார், செய்திகள் படிக்கப்பட்டதுடன் கொடி வணக்கம், வாழ்த்துப்பாக்கள் ஆகியன பாடப்பட்டதைத் தொடர்ந்து தேநீர் விருந்தும் நடாத்தப்பட்டது.

அல்வாய்க்கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு வீட்டில் சிரமதானமூலம் குழந்தைகள் மலகூடமொன்றும் அமைக்கப்பட்டது.

இச்சிரமதான முயற்சியில் பருத்தித்துறை நகரசபைத் தலைவர், டாக்டர் ஜீவநாயகம், பொதுசன சுகாதார பரிசோதகர்கள் உட்பட பல பிரமுகர்கள் பங்குபற்றினர்.

### புலோலியில்

புலோலி கிராமசபைப் பகுதிக்கான சுகாதார வார விழாக் கொண்டாட்டங்கள் இன்று புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கரணவாய் மகாவித்தியாலய அதிபர் திரு. சி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வி. ஜீவநாயகம், சுகாதாரக்கல்வி போதனாசிரியர் திரு. எஸ். பொன்னம்பலம், ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. எஸ். கந்தப்பு முதலான பலர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் திரு. தா. மா. இராசலிங்கத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் பாலவர்களது நடனம், பாராட்டு முதலான இன்னிசைப்போட்டிகளும் நடைபெற்றன.

போட்டிகளில் தேர்வுபெற்ற பாடசாலைகளுக்குச் சான்றிதழ்களும், பரிசில்களும் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்டன.

போட்டிமுடிவுகள் வருமாறு:

**பாட்டு**

புலோலி கிழக்கு அரசினர் பாடசாலை, புலோலி மெதடிஸ்த பாடசாலை, வராத்துப்பளை த. க. பாடசாலை.

**பாட்டு**

புலோலி கிழக்கு அரசினர் பாடசாலை, புலோலிமெதடிஸ்த பாடசாலை, வராத்துப்பளை த. க. பாடசாலை,

பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. எஸ். சுப்பிரமணியம் [illegible] பற்றினர்.

# வரி விளம்பரம்

### கல்வி

ஜி. சி. இ. உயர்தரம் கலை / விஞ்ஞானம், ஜி. சி. இ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், ஜி. சி. இ. முதல் வருடம் விஞ்ஞானம்; ஜே. எஸ். சி., ஆங்கிலம் / தமிழ் தட்டியல், சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம்; சிங்களம் ஆகிய வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. யூனிட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 549

பயிற்றப்பட்ட உபாத்தியாயர்கள் இலங்கை பல்கலைக்கழக பட்டபரீட்சைக்கு வெளிப் பரீட்சார்த்திகளாகத் தோற்றலாம். ஜி. ஏ. கியூ வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆடி 1-ம் திகதி பி. ஏ. வகுப்புகள் ஆரம்பமாகும். தாமதம் செய்யாமல் உடனே சேருங்கள். யூனிட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 550

ஆடிமாதத்தில் எங்கள் ஜி. சி. இ. சாதாரணம், வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும்; விபரங்களுக்கு எழுதவும். யூனிட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை, வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 551

மிகவும் நல்ல செய்தி நல்ல அனுபவமுள்ள பட்டதாரிகளால் காலை / மாலை ஜி. சி. இ. உயர்தரம் / சாதாரணம், வகுப்புகளுக்கு தூய / பிரயோகம் / உயர்தர கணிதம், இரசாயனம், பௌதீகம், உயிரியல், தாவரவியல், விலங்கியல், ஆங்கிலம் ஆகியபாடங்கள் விசேஷமாகக் கற்பிக்கப்படுகின்றது. உடன்சேருபவர்களுக்கு சித்தி உத்தரவாதம், யூனிட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், கெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 552

### புதிய குடியியல் J. S. C.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதிய **புதிய குடியியல் எட்டாம் வகுப்பு** விலை: 1ரூ. 90 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்—புத்தகசாலை, 218, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 508

## புதிய நிர்வாகிகள் தெரிவு

இளவாலை, புதன்

ஸ்ரீ முருகன் சனசமூகநிலையதின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சனசமூகநிலையக் கட்டிடத்தில் நடைபெற்றது. விவசாயம், உற்பத்தி, கைத்தொழில் ஆகியன அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர், தலைவர்: வித்துவான் திருநாவுக்கரசு, உபதலைவர்: திரு. தம்பி காரியதரிசிகள்: திருவாளர்கள் க. குலேந்திரன், க. சங்கரசிவம், தனாதிகாரி: திரு. செ. சிவசுப்பிரமணியம், நூல்நிலையப் பொறுப்பாளர்கள்: திருவாளர்கள் செ. செல்வராசா, இ. சுனேஸையர். 21 அங்கத்தவர்களைக் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### வேலை வாய்ப்பு

புகைவிரதப்பகுதித் தலைவர்க்கான பரீட்சை; விண்ணப்பப்பத்திரங்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். வர்த்தக கலாசாலை, 230, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 560

### விற்பனைக்கு

புதிதாக இழை போடப்பட்ட 11×28 பயர்ஸ்ரோன் (Firestone) ட்ரக்டர் டயர் விற்பனைக்கு உண்டு. கணேசன் பேக்கரி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 561

### காணவில்லை

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சரவணமுத்து சிவக்கொழுந்து என்பவரின் குடும்பத்தாரின் 11 கூப்பன்கள் தாவடிச் சந்திக்கருகாமையில் தவறிவிட்டன, கண்டெடுத்துக் கொடுப்பவருக்கு ரூபா 25/- சன்மானம் வழங்கப்படும். கண்டெடுப்பவர்கள ஈழநாடு காரியாலயத்தில் அல்லது மேற்குறிப்பிட்டவரிடம் சேர்க்கவும். 559

**தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை** முதலிய பலகொடிய வியாதிகள் குணம் படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாய பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்

## பாடசாலை விளையாட்டுப் போட்டி

கண்டி, புதன்

கண்டி மாவட்ட தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப்போட்டியில் ஆண்களுக்குரிய முதலிடத்தைக் கண்டி சீ. சீ. தமிழ்க்கலவன் பாடசாலையும், பெண்களுக்குரிய முதலிடத்தை மாருசேனை அரசினர் பாடசாலையும் பெற்றன.

ஆண்களுக்குரிய இரண்டாம் இடத்தை மாருசேனை அரசினர் பாடசாலையும், பெண்களுக்குரிய இரண்டாமிடத்தை கண்டி சீ. சீ. தமிழ்க்கலவன் பாடசாலையும் பெற்றன.

வித்தியாதரிசி திரு. எஸ். இராசா தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு கண்டி வித்தியாதிகாரி திரு. எம். டி. ஆர். பெரேரா பரிசுகளை வழங்கினார்.

## ஜப்பானிய மல்லர்கள் வெற்றி

பெர்லின் ஜூன் 23

ஜப்பானிய மல்லர்களுக்கும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுகளுமிடையே பெர்லினில் நடைபெற்ற குஸ்தி விளையாட்டுப்போட்டியில் 6—2 புள்ளியில் ஜப்பானிய மல்லர்கள் வாகைமாலை சூடினர். முதற் போட்டியில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக் போஷ்டினர் 5:5 - 5:2 புள்ளிகளில் வெற்றி அடைந்தனர்,

ஜோஜி சாமூரா, கெஞ்சி ரோ ஹைராக் ஆகிய இரு ஜப்பானிய மல்லர்களின் விளையாட்டை எல்லோரும் பாராட்டினர், அவர்கள் டோக்கியோவில நடந்த ஒலிம்பிக் போட்டியிலும் பங்குபற்றினவர்களாவர்.

உலக குஸ்திவீரரைத் தெரிவு செய்யும் போட்டியில் கலந்து கொள்வதற்காக ஜப்பானிய மல்லர்கோஷ்டி பின்லாந்துக்குச் சென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு

# முதல் தவணைப்பணம் வழங்கப்பட்டது

# ஐந்து வருடங்களில் முழுத் தொகையும் செலுத்தப்படும்

## மொத்த நஷ்டஈடு ஐந்தரை கோடி ரூபாய்

கொழும்பு, செவ்வாய்

**எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கும் எண்ணெய்க் கம்பெனிகளுக்குமிடையே இன்று காலை ஒப்பந்தமொன்று கைச்சாத்தானது. மூன்று எண்ணெய்க் கம்பெனிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து முதல் தவணையில் ஒரு கோடியே 35 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.**

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் முதல் தவணையில் ஷெல் எண்ணெய்க் கம்பெனிக்கு ரூபா 67 லட்சமும் எஸ்ஸோ எண்ணெய்க் கம்பெனிக்கு ரூபா 38 லட்சமும் கல்டெக்ஸ் எண்ணெய்க் கம்பெனிக்கு ரூபா 30 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தப் பணம் வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்ல முடியாது. மிகுதிப் பணம் இன்னும் ஐந்து வருடத் தவணையில் கொடுக்கப்படும். ஒவ்வொரு வருடமும் ஜூலை முதல் திகதிக்கு முன்னர் இப் பணம் கொடுபடும்.

ஷெல் எண்ணெய்க் கம்பெனிக்கு மொத்தப் பணமாக மூன்று கோடியே 30 லட்சம் ரூபாவும் எஸ்ஸோ எண்ணெய்க் கம்பெனிக்கு ஒரு கோடியே 10 லட்சம் ரூபாவும் கல்டெக்ஸ் எண்ணெய்க் கம்பெனிக்கு ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாவும் வழங்கப்படும். இதன்படி மூன்று எண்ணெய்க் கம்பெனிகளுக்கும் மொத்தம் 5 கோடியே 50 லட்சம் ரூபா வழங்கப்படும், வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் 5 வருடத் தவணையில் செலுத்தப்படவிருக்கும் பணத்துக்கு வெளிநாட்டுச்செலாவணியை இக் கம்பெனிகளுக்கு அனுமதிக்க ஒப்பந்தம் இடமளித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதிமந்திரி திரு. வன்னிநாயக்காவும் எண்ணெய் கார்ப்பரேஷன் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளையும் கைச்சாத்திட்டனர்.

---

கனிஷ்ட தொழில் நுட்ப

## உத்தியோகஸ்தர் (1-ம்) பகுதி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த மார்ச் மாதம் கொழும்பில் நடைபெற்ற கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்கள் (முதல் வருடம்) பரீட்சை முடிவுகள் வருமாறு:-

ரி அருணானந்தன், எஸ் மகாதேவா, ரி புஸ்பவனநாதன், ரி பேரின்பநாதன், என் இராஜநாயகம், ரி ரவீந்திரநாத், சண்முகரத்தினசர்மா, வி சண்முகநாதன், எஸ் சிவலிங்கம், ஜி ஸ்ரீகுணநாதன் எவ். கக்கியூ, கே ஸ்ரீபத்மநாதன், கே தர்மேந்திரன், ஏ ஜெயரத்தினம், எஸ் இராஜா, ரசீக், எஸ் விமலராஜா, எஸ் மருள்நீக்கிபார் எஸ் அருளானந்தன், வி சிம்மியானந்தன், எஸ் சபாரத்தினம், ஆர் சந்திரசேகரம், எஸ் பரமேசன், ரி சிவராமலிங்கம், கி வைத்தியாம்பிள்ளை, எஸ் சத்தியமூர்த்தி, எஸ் சர்வானந்தம்.

**நூன சித்தி**

நித்தியானந்தன், என் தெய்வேந்திரம், எஸ் பொன்னம்பலவாணர், விபினச்சந்திரன், வி நவரத்தினராசா.

---

## அராலி கொலை வழக்கில் நான்கு எதிரிகளும் விடுதலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

அராலி கொலை வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஜே. எப். அந்துருபாரூ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின், நீதிபதி நான்கு எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் அராலியைச் சேர்ந்த நாகன் சீமான், நாகன் ராசன், நாகன் தம்பிப்பிள்ளை பிள்ளையன் செல்லையா ஆகிய நால்வரும் இவ்வருடம் மார்ச் மாதம் 17-ந் திகதி கந்தன் மயிலன் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், எஸ ஸ்ரீதரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

சம்பவம் நடந்த தினம் இரவு 7-30 மணிக்கு எதிரிகள் நால்வரும் காலஞ்சென்றவரின் வீட்டிற்குச் சென்றதாகவும், 1-ம் எதிரி காலஞ்சென்றவரைக் கூப்பிட்டதாகவும், காலஞ்சென்றவர் வெளியே வந்த சமயம் 1-ம், 3-ம் எதிரிகள் அவரை பொல்லால் தாக்கினர்களென்றும், அதன்பின் நான்கு எதிரிகளும் அவரை 25 யார் தூரம்வரை துரத்திச் சென்றார்களென்றும் இச்சம்பவம் பற்றிக் கூறப்பட்டது.

காலஞ்சென்றவர் நிலத்தில் விழ்ந்ததும் நான்கு எதிரிகளும பொல்லால் தாக்கினர்களென்றும், 1-ம் எதிரி மண்டாவினால் குத்தினரென்றும், அதன்பின் நான்கு எதிரிகளும் ஓடிவிட்டார்களென்றும் மேலும் இச்சம்பவம் பற்றிக் கூறப்பட்டது.

---

## பகிரங்க மரணதண்டனை

சைகோன், ஜூன் 22

நாசவேலையில் ஈடுபட்ட ஒரு வியட்காங் இளைஞனுக்கு இன்று சைகோன் மார்க்கெட்டில் பகிரங்கமாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. சில நாட்களுக்கு முன்னர் இந்த இளைஞன் தென்வியட்நாமிலுள்ள ஒரு அமெரிக்க பாசறையை நாசப்படுத்த முயற்சித்திருந்தான்.

---

## அரசியல் இடமாற்றங்கள்

கொழும்பு, செவ்வாய்

கூட்டரசாங்கத்தினால் அரசியல் காரணத்திற்காக 500 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டார்களென்று கல்வி இலாகா மதிப்பிட்டுள்ளது. இந்த இடமாற்றங்கள் கடந்த தேர்தல் சமயத்தில் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

தேர்தலுக்கு முன்பு அரசியல் காரணத்திற்காக ஆயிரம் ஆசிரியர்களுக்குமேல் இடமாற்றம் செய்யப்பட்டபோதிலும் அவர்களின் விபரம் இன்னும் தயாராகவில்லை.

---

## தலைமை ஆசிரியர்கள் முறைப்பாடு

கொழும்பு, செவ்வாய்

கல்வித்தரத்தையும் பாடசாலைகளில் ஒழுங்கையும் பேணுவதற்கு தலைமையாசிரியர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவேண்டுமென தலைமையாசிரியர்கள் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளனர்.

1960-ம் வருடம் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து பாடசாலை அதிபர்கள் பெயரளவில் மட்டுமே இருந்துவருகிறார்கள். பாடசாலைகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் இங்கு ஒழுங்குக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவது பெரிதும் கஷ்டமாகியுள்ளது எனவும் அவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளார்கள்.

---

## பௌத்த பிக்கு கொலை?

கொழும்பு, செவ்வாய்

பொலநறுவைப் பகுதியிலுள்ள ஒரு கெல்வயலில் ஒரு பௌத்த பிக்கு கத்தியால் குத்தப்பட்டு இறந்துகிடக்கக் காணப்பட்டார்: இதுசம்பந்தமாகப் பொலிஸார் புலன் விசாரணைசெய்துவருகின்றனர்.

---

## சொத்துக்கள்

கோலாலம்பூர், ஜூன் 22

சிங்கப்பூரிலுள்ள இந்தோனேஷிய தூதராலயத்தையும், மலேஷியாவிலுள்ள இதர இந்தோனேஷிய சொத்துக்களையும் [illegible] அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

---

யாழ்ப்பாணம்

## கனிஷ்ட தொழில்நுட்ப கல்லூரி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சை முடிவுகள் வருமாறு:

1965 வருட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்:

**மோட்டார் பொறியியல்**

ஆ சுப்பிரமணியம், வி. சின்னத்துரை, பி தவகுலசிங்கம் நா சிவபாலமூர்த்தி, தா பாலசுப்பிரமணியம், கு நித்தியானந்தன், த சற்குணசிங்கம், தே பீற்றர், த சண்முகலிங்கம்.

**உலோக வேலை**

சி செல்வரத்தினம், ச பழனி வடிவேல், க சிவசம்பு, த சரவணபவானந்தன், வை பூரணனந்தபிள்ளை, பாலேந்திரன, ஏ கோடீஸ்வரன்.

**மின்கம்பி இணைத்தல்**

செ மகாலிங்கம், க கருணாகரன், செ லெட்சுமிகாந்தன.

**மரவேலை**

வ் மகேஸ்வரநாதன், ச தேவராசா.

பொறிமுறைத் தொழில் போதனையின் மாணவர்களின் 1964—65 ஆண்டு இறுதிப் பரீட்சையின் முடிவுகள்:

மு சிவம், செ சண்முகசுந்தரம், ச செல்லத்துரை, வை யோகலிங்கம், வே கிருஷ்ணபிள்ளை, சு கணேச, செ விமலேந்திரன், பெ இராசகுணேந்திரன், ப ஸ்ரீசுந்தரராசா, க நாகராசா, சே மகாலிங்கசிவம், ஐ ஸ்ரீராதாகிருஷ்ண பிரசாத், இ சண்முகசுந்தரம், கா பாலேந்திரன், செ பத்திநாதர், க செல்வரத்தினம், ச வேலாயுதம், எம் எம் மகுமூப், ந அழகரத்தினம்,

கட்டடத் தொழில் போதனையின் மாணவர்களின் 1964—65 ஆண்டு இறுதிப் பரீட்சையின் முடிவுகள்:

செ இராயப்பு, த தீபராசா, அ இஸ்மத்நூல, தா தங்கரத்தினம், அ நடராசசுந்தரம், பா பஞ்சேந்திரன், ஆ பேரம்பலம், இ இராசகுலேந்திரன், க குமரேசர், கோ சிவபாதம், க சீவரத்தினம், இ ஸ்ரீசண்முகராசா, வே பதஞ்சலி ம தங்கவேல், அ யோகரத்தினம், எஸ் ஆனந்தலிங்கம், க சண்முகநாதன்,

1965-ம் ஆண்டு முதலாம், இரண்டாம் வருடப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள்:

**நில அளவை (முதல் வருடம்)**

என குலசேகரம், எஸ் பரம்சோதி, கே தியாகரத்தினம், (நூன. சித்தி), கே இராசரத்தினம, எஸ் ஏ ராஜகோபால் (நூனசித்தி), என் மார்க்கண்டு, ஆர் அரசரத்தினம், கே கருணகிரிநாதன், ஏ சோதிலிங்கம், ரி கனகசபை, ஏ ஈ ஐ இரத்தினராசா, ஏ அமலதாஸ, வி முருகானந்தன், கே தங்கராசா, எஸ பி அருளப்பு, கே கணேசராசா;

**பொறியியல் எந்திரம் (முதல வருடம்)**

என். சரவணமுத்து, என். வேதநாயகம், சி. பாலசுப்பிரமணியம், கே. திருச்சோதி.

**மின்சார எஞ்ஜினியரிங் (முதல் வருடம்)**

ஏ. நடராசா, ஏ. அருளானந்தம், ஸ். சேனுதிநாதன், எஸ் ஸ்ரீராமலிங்கம், சி. சேனுத்திரன், கே. சபிலாயபிள்ளை.

**கட்டட அமைப்பு (இரண்டாம் வருடம்)**

பி ஸ்ரீதரன், ஜி ஜேசுதாசன், கே கனகசுந்தரம், எம் அமரைபவநாயகம் (நூனசித்தி), பி பரராசசிங்கம், பி ஈ துரைராஜா, நூனசித்தி) வி லோகநாதன் (நூனசித்தி) என் இராஜரத்தினம்.

**கட்டட அமைப்பு (முதல் வருடம்)**

ஈ பாலராமா, கே இராஜலிங்கம், ரி வன்னியசிங்கம், கே பாலகுமாரன், எஸ் சண்முகவடிவேல், எம் சாம்சிவம், என் சுப்பிரமணியசர்மா எஸ் சண்முகானந்தன், ஏ அருளானந்தம், கே வாமதேவன், எஸ பரமசாமி.

**நூனசித்தி**

ஏ என் ராஜகோபால். எஸ் குமாரன், ரி வை ஆனந்தன்; எஸ் என் ரங்கானந்தன்,

**பொறிமுறை எந்திரவியல் (முதல் வருடம்)**

வ சுப்பிரமணியம், சி சிவசுப்பிரமணியம், என் சுந்தரலிங்கம், என் விநாயகமூர்த்தி, எஸ் மகாலிங்கம், எஸ் சிசுபுத்திரன், எம் எம் ஜேசுதாசன் எஸ அற்புதராஜா, சி நவரத்தினம், எம் எம் அந்தோனிற்றே. வி ஸ்ரீஹரன், எம் தெய்வகுமாரன், எஸ் ஆனந்தசெல்வம், எஸ் பூரணனந்தபிள்ளை.

**நூனசித்தி**

எஸ் கனகசுந்தரம், எம் எஸ் தாகீது.

**பொறியியல் எந்திரம் (இரண்டாம் வருடம்)**

ஏ ஆர் ஈ ஜெயரத்தினம், டி டபிள்யு வாமதேவா.

**மின்சார என்ஜினியரிங் (முதல் வருடம்)**

சீ வரகுணமகேசன், எம் நல்லையா, ரி விவேகானந்தன், எஸ் பஞ்சநாதன், எஸ் நடராசா. வ் தம்மையா, ரி செல்வராசா, எஸ் மார்க்கண்டு, கே தர்மராசா, ஏ அருட்சோதி, எஸ் சிவஞானசூரியர், கே தனபாலசிங்கம், எம அருட்பிரகாசம், ஏ சித்தியானந்தன்.

**நூன சித்தி**

கே வாமதேவன், கே மகாதேவன், எஸ் முருகேசு, எஸ் சந்திரமௌலேஸ்வரஐயர்.

**மின்சார என்ஜினியரிங் (இரண்டாம் வருடம்)**

பி ஆனந்தராசா, ரி வல்லிபுரபிள்ளை.

**நில அளவை (இரண்டாம் வருடம்)**

ஆர் விமலேஸ்வரன்.

---

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 25-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணி முதல் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் ஸ்ரீமத் சி. டீஸ். எ. மணிபாகவதர் 'பாஞ்சாலி சுயம்வரம்' என்னும் பொருள்பற்றியும், முத்த விநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் "இளையான்குடி மாறநாயனார்" என்னும் பொருள் பற்றியும் கதாபிரசங்கம் செய்வார்.

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், விபா.

இன்றுவியாழக்கிழமை மாலை 6-30 மணியளவில் கந்தர்மடம் பழம் றோட் விநாயகராலய மண்டபத்தில் ஸ்ரீமத் ஸி, எஸ், எஸ், மணிபாகவதர் 'பொய்யாமொழியும் மெஞ்ஞான பண்டிதனும்' என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கம் செய்வார்.

## இன்று

யாழ்ப்பாண இலங்கை அமெரிக்க கலாச்சார நிலையத்தில் இன்று மாலை 6 மணிக்கு "கனவுகளின் மனோதத்துவம்" என்னும் பொருள் பற்றி அரசாங்க அதிபர் திரு. எஸ். டி. ஜெயவீரா ஓர் விரிவுரை நிகழ்த்துவார். மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஜி. சி. நயில்ஸ் கூட்டத்திற்கு தலைமைதாங்குவார். விரிவுரையின்பின் ஓர் திரைப்படக்காட்சியும் காண்பிக்கப்படும்.

சங்கானை, புதன்

சங்கானை அரசடி வயிரவர் கோவில் வருடாந்த உற்சவம் ஜூன் மாதம் 25ந் தேதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஜூலை 4ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவுடன் முடிவடைகின்றது. மறுநாட்காலை நடராஜர் ஆனி உத்தர அபிஷேகமும் நடைபெறும்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்தி[illegible] அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org